# கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் - 'திராவிட மாடல்' அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னின்று நடத்திய

# வையகத்திற்கே வழிகாட்டும் - வரலாற்றில் நிலைத்திட்ட 'வைக்கம் விழா' காட்சிகள் காணீர்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என். வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நூலகத்தை பார்வையிட்டார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என். வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆஷா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் நேற்று (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவில், நினைவகத்தில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என்.வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறைஅமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



'தந்தை பெரியாரின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழா'வில் பங்கேற்றிட கேரள மாநிலம், வைக்கம் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு – பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்த காட்சி.

### நொளம்பூர் வே.ராஜன், ப.ஆலன் முன்னிலை!

### ஆறுபடை பி.சரவணன் தலைமையில்

## மதுரவாயல் 145வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

### காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ., வீரமுரசு, இளம் பேச்சாளர் மா.ஜேஸ்பின் இலக்கிய ராணி சிறப்புரை!

சென்னை டிச.13-

மதுரவாயல், 145வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் டி. ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ, வீரமுரசு, இளம் பேச்சாளர் ஜேஸ்பின் இலக்கிய ராணி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 145 வது வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதய நாள் தெருமுனை கூட்டம் இன்று (13-12-2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு நேதாஜி அவென்யூ கிருஷ்ணா நகர், நெற்குன்றத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு அமைப்பு சாரா ஓட்டுனர் அணி பகுதி துணை அமைப்பாளர் ஆறுபடை பி.சரவணன் தலைமை ஏற்கிறார்.

பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வட்ட கழக செயலாளர் ப.ஆலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஆர்.கர்ணல், சி.ஏ.முரளி, சி.டி.ரமேஷ், ஜி.ஆர்.சரவணன், வி.ஏழுமலை, மு.அரசகுமார், பி.கிருபாபால சந்தர், கே.எல்.சந்தானம், சி.ஆர்.இன்பராஜ், கே.முனுசாமி, எஸ்.எஸ்.பாரின்பிரசாத், கே.துரைவேல், எம்.ஜான்அன்பரசு ஆகியோர் வரவேற்கின்றனர். கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் வீரமுரசு, இளம் பேச்சாளர் மா.ஜேஸ்பின் இலக்கியராணி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். மேலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்ட செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்து உரை நிகழ்த்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, பி.டி. பாண்டிச்செல்வம், அ.ம.துரை வீரமணி, கே.குமரேசன், எம்.ஏ. செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி, தீ.பாலாஜி, எம்.உதயகுமார், வட்ட கழக செயலாளர்கள்; எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், ச.சசிகுமார், எம்.ரூபன், எம்.இ.ஸ்டாலின் எம்.சி, ரமணிமாதவன்.எம்.சி மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இ.ஆர்.ராஜேஷ், ஏ.கார்த்திக், இ.ஜெகன், பி.எம்.ராஜா ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.


